**செய்தி வெளியீடு எண்: 745** **நாள்: 16.10.2018**

## செய்தி வெளியீடு

தமிழகத்தில் கூட்டுறவுத்துறையின் கீழ் 32,894 நியாய விலை கடைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் பொது மக்களுக்கு அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய், பருப்பு, கோதுமை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் முறையாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்களுக்கு எந்தவித இடையூறும் இல்லாமல் நியாய விலை கடைகள் மூலமாக தகுதியுள்ள அனைவருக்கும் அத்தியாவசியமான பொருட்களை வழங்கி வருகிறது. இந்நிலையில் 15.10.2018 முதல் ஒருசில பணியாளர் சங்கங்கள் மட்டும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு உண்மைக்குப் புறம்பான செய்திகளை நாளிதழ்களுக்கு கொடுத்து தவறான செய்திகளை பொது மக்கள் மத்தியில் பரப்ப முயற்சித்து வருகின்றது .

மொத்தமுள்ள 32,894 நியாய விலை கடைகளில் , 3.4 சதவீத கடைகளின் பணியாளர்கள் மட்டுமே பணிக்கு வராமல் உள்ளனர். இதற்கும் மாற்று ஏற்பாடுகள் செய்து மக்களுக்கு உரிய காலத்தில் அத்தியாவசியப் பொருட்கள் தங்கு தடையின்றி விநியோகம் செய்திட மாவட்ட அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. நேற்றைய தினம், 7 சதவீத பணியாளர்கள் மட்டுமே இந்தப் போராட்டத்தில் கலந்துக் கொண்டனர் . அதன் விளைவாக 5 சதவீத கடைகள் மட்டுமே பாதிக்கப்பட்டது. அதற்கும் மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது . இன்று இந்த சதவீதம் 3.4 என குறைந்துள்ளது.

நியாய விலைக் கடை பணியாளர்களது கோரிக்கையினைப் பரிவுடன் அரசு பரிசீலிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன், அரசாணை எண் (டி) எண் 169, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 17.09.2018—ன்படி குழு அமைக்க அனுமதித்து ஆணையிட்டது. அதன்படி கூடுதல் பதிவாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, பல்வேறு பணியாளர் சங்கங்களின் கோரிக்கைகள் அக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டு குழுவால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

பணியாளர்கள், இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவதை தவிர்த்து, பொது மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு, துறைக்கும், அரசுக்கு ஒத்துழைக்க வேண்டும். மேலும், நியாய விலைக் கடைப் பணியாளர்களது கோரிக்கைகள் பரிசீலனையில் உள்ளது. நியாய விலை கடைப் பணியாளர்கள் இப்போராட்டத்தில் ஈடுபடாமல், பொது மக்களுக்கு எவ்வித சிரமமுமின்றி அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**